தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயயஉ	மலர்
சரு	விரோதிகிருது, புரட்டாசி	௬
	(1971 — செப்டம்பர் — அக்டோபர்)	

அகவன் மகள்

டாக்டர் மோ. இசரயேல், எம். ஏ., பி. எச். டி.
தமிழ்த்துறை,
மதுரைப் பல்கலைக் கழகம்.

இலக்கியம் மக்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. பண்டை இலக்கியங்களில் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், குறிக்கோள்கள் ஆகியன பொதிந்து கிடக்கின்றன. அவையெல்லாம் எல்லோர்க்கும் தெற்றெனப் புலப்படுதல் இல்லை. எனவே, இன்றும் அறிஞர்கள் பண்டைக் கால இலக்கியங்களை ஆய்ந்து செய்திகளை அறிந்து கொண்ட வண்ணமே இருக்கின்றனர் ஆய்ந்து கண்ட செய்திகள் பலருக்கும் அறிவூட்டி, மகிழ்ச்சியடையச் செய்கின்றன. சங்க இலக்கியத்திற்காணும் சில மாந்தர் பற்றிய செய்திகள் அப்படியே இன்று காணக்கிடைக்காவிடினும், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் சிறிது வேறுபட்ட நிலையிலாயினும் நாட்டுப் புறங்களில் நிகழ்வதனைக் காணலாம். பண்டைப் பெயர்கள் மறைந்து போயினும் வேறுபட்ட பெயர்களால் இன்றும் அவை வழக்கில் அமைகின்றன. பண்டைக்காலப் பழக்க வழக்கங்களுள்ளும் பல இக்காலத்திலும் வாழ்வில் நிகழ்வதனைக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் குறுந்தொகை என்னும் நூலின்கண் 'அகவன் மகள்' என்ற சொற்றொடர் இருபாடல்களில் காணப்படுகின்றது [1] பிற்கால இலக்கியங்களிலும் இக்கால வழக்கிலும் இச்சொற்றொடர் இடம் பெறவில்லை. எனினும் 'அகவன மகள்' தொன்றுதொட்டு இன்றுவரை தமிழ்க்குடி மகளாகத் தமிழர் வாழ்வோடு, பண்பாட்டோடு உறவு கொண்டுள்ளவள்

என்று கூறுதற்குரிய சான்றுகள் உள்ளன. இச்சொற்றொடரால் பெயர் வழங்கப்படாவிட்டாலும் இன்றும் அகவன் மகளிர் இடத்தைப் பெறும் மகளிர் உளர். தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அகவன் மகளிர் இயல்பு, வாழ்க்கை முறை, வரலாறு ஆகியவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இம்மகளிர் சங்க இலக்கியத்தில் பல்வகைப் பெயர்களால் குறிக்கப்படுகின்றனர். குறுந்தொகையில் அகவன் மகளிர் எனப் பெயர் பெற்றுள்ள அவர்கள் அகநானூற்றில் முதுவாய்ப் பெண்டிர் (அகம். 22, 98) எனவும், பொய்வல் பெண்டிர் (அகம் 98) எனவும் நற்றிணையில் செம்முது பெண்டிர் (நற். 288), எனவும் குறிஞ்சிப் பாட்டில் அறியுநர் (குறிஞ்சிப் பாட்டு. 4) எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளனர்.

அகவல் அழைத்தல்; அகவிக கூறுதல் எனப் பொருள்படும். கடவுளரை அழைத்துக் கூறும் இயல்பினள் ஆதலின் இப்பெயர் பெற்ருள். அகப்பாடல் சிலவற்றில் இவள் இனத்தவர் 'அகவுநர்' (அகம், 152, 208) என்று குறிப்பிடப்படுவதும் இவண் நோக்கத்தக்கது, முதுவாய்ப்பெண்டிர் என்பது அவர்கள் முதுமைப் பருவம் எய்தியவர் என்றும், பேசி முதிர்ந்த வாயினை உடையவர் எனக்கொண்டு சொல்லாற்றல் மிக்கவர் என்றும் கொள்ள இடந்தருகின்றது. உண்மையினை அறிந்து கூறுதல் மாட்டாதவர் ஆதலின் பொய்வல் பெண்டிர் எனவும் இலக்கியங்களில் பெயர் பெற்றுள்ளார்கள் அறியுநர் என்பது பின் நிகழ்வதனை அறிகின்றவர் என்பதைக் குறிக்கலாம். அறியுநர் என்பதற்கு நச்சினர்க்கினியர் கட்டினுலும் கழங்கினுலும் எண்ணியறிவார்" என உரைவிளக்கம் தருகின்ருர். தொல்காப்பியனுர்

கட்டினும் கழங்கினும் வெறியென விருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்

(தொ. பொ. 115)

என்று கூறுகின்ற அடிகட்கு நச்சினர்க்கினியர் "கட்டுவிச்சியும் வேலனும் தாம் பார்த்த கட்டினுலும் கழங்கினுலும்" என்று உரை கூறுவது இம்மகளிர் கட்டுப்பார்த்தறியும் ஆற்றல் பெற்றவர் என்பதனையும் தொல்காப்பியனுர் காலத்திலேயே அம்மக்கள் கட்டுப்பார்க்கும் வழக்கம் உடையவராக இருந்தனர் என்பதனையும் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

அகவன் மகளிர் இயல்புகள்

சங்க இலக்கியச் சான்றுகள் வாயிலாக அகவன் மகளிர் இயல்புகளை நன்கு அறிதல் இயலும். இவர்கள் பாடன்மகளிர் என்பது வெள்ளிடைமலை. இவர்கள் சங்ககால இசைக் குலத்தைச் சார்ந்தவராயிருத்தல் வேண்டும். எனவே பாணமகளிர் இனத்தவர் எனக் கொள்ளுதல் தகும்.[2] இவர்கள் புரவலர்களது நாடு, மலை, குன்றம் ஆகியவற்றைப் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தனர் (குறு. 23). மலை, குன்று ஆகியவற்றை மிகுதியும் பாராட்டிப் பாடும் மரபினர்; எனவே மலை வாழ் மக்கள் எனக் கருத இடம் உள்ளது. இவர்கள் சங்குமணிகளாகிய அணிகலன்களை அணிந்தவர்;[3] கையில் வெள்ளிய முனையையுடைய சிறிய கோலைக் கொண்டிருப்பர். அக்கோல் வெள்ளியாற் செய்த பூண்கட்டிய நுனியை யுடையது (குறு. 298). 'வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்' என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது. அகவன் மகளிர்க்குரிய தொழிலில் ஈடுபடும் பாண்மகளிர் முதுமைப் பருவத்தினராக இருந்தனர் என்று தெரிகின்றது. இவர்களைச் 'செம்முது பெண்டிர்' என்று நற்றிணைப் பாடலும், முதுவாய்ப் பெண்டிர் என அகநானூற்றுப்பாடலும், 'மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தலையுடையள்' எனக் குறுந்தொகைப் பாடலும் குறிப்பிடுவது நரை மூதாட்டியர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.[4]

தொழில்

அகவன்மகளிர் மலைவளம் பாடுகின்றவர்கள்; தெய்வங்களை அழைத்துப் பாடுகின்றவர்கள்; கட்டுப்பார்க்கின்றவர்கள்; அஃதாவது தெய்வம் ஏறிக் குறி கூறுகின்றவர்கள்; ஊர் ஊராய்ச் சுற்றித் திரிபவர்கள்; அவர்கள் குரவைக் கூத்து நிகழ்த்துதலும் உண்டு. அவர்கள் பாடி மடப்பிடியைப் பரிசிலாகப் பெறுவர்.

கட்டுக் காணல்

கட்டு என்பது முறத்தில் நெல்லை வட்டமாகப் பரப்பிவைத்துத் தெய்வங்களைப் பாடி எண்ணிப் பார்த்துக் கட்டுவித்தி காணும் குறி; நிகழ்வதனைச் சொல்லும் குறி என்பாரும் உளர்.[5]

கட்டுக்காணும் முறை

கட்டுக்காணல் வேலன் வெறியாட்டிற்கு முந்திய நிலை ஆகும். அகவன் மகளாம் நரை மூதாட்டியைத் தம் மனையகத்துக் கொணர்ந்து முறத்திலே நெல்லையிட்டு எதிரே தலைமகளை

நிற்கச்செய்து, தெய்வத்திற்குப் பிரப்பிட்டு வழிபாடு செய்ய ஏற்பாடு செய்வர் தாயர். [6] பின்னர் அந்நெல்லை நந்நான்காக எண்ணி எஞ்சியவை ஒன்றிரண்டுமூன்றாயின் முருகணங்கெனவும் நான்காயின் வேறொரு நோய் எனவும் அகவன் மகள் கூறுவள். முருகணங்கென்று கூறின், உடனே வேலனை அழைத்து, வெறிக்களன் திருத்தி, முருகவேளுக்குச் சிறப்பெடுத்துக் கழங்கு குறிபார்ப்பர். பின்னர் வேலன் வெறியாட்டிற்கு ஏற்பாடு செய்வர்.

கட்டுப் பார்க்கும் நிலை

கட்டுப் பார்க்க எண்ணும் ஒரு நிகழ்ச்சியினைத் தோழி, தலைவன் சிறைப்புறமாகத் தலைவிக்குக் கூறுகின்றாள். "தலைவன் தலைவியை விரைய வரைய முற்படவில்லை. அதனால் அவளுக்கு இடையூறின்றிப் புணர்ச்சியின்பம் இடையறாது கிடைக்காது போய்விடுகின்றது. அவள் காமம் தாங்க இயலாது வருந்துகின்றாள். நன்னுதல் பசந்து விடுகிறது. அவளது அழகு கெட்டு விடுகின்றது இந் நிலையில் மகள்பால் காணும் வேறுபாட்டின் காரணம் அறியத் தாயர் முற்பட்டுச் செம்முது பெண்டிரின்முன் முறத்தில் நெற்பரப்பிக் கட்டுக் கேட்குமாயின் முருகணங்கிற்று என்று கூறுவள்" என்று கூறும் காட்சியொன்று நற்றிணைப் பாடலில் பின்வருமாறு அமைந்து கிடைக்கின்றது.

குன்ற நாடன் பிரிவிற் சென்று
நன்னுதல் பரந்த பசலைகண்டு அன்னை
செம்முது பெண்டிரொடு நென்முன் நிறீஇ
கட்டிற் கேட்கும் ஆயின்
....
....
நெடுவேள் அணங்கிற் றென்னுங் கொல் அதுவே
(நற். 288)

எனவே தலைவியின் வேறுபாடு எதனால் நிகழ்ந்தது என்பதனை அறியவே தாயர் முதுமகளை அழைத்துக் கட்டுக் காணுமாறு நிற்பர் என அறிதும்.

கட்டுக்காண முற்பட்ட இன்னொரு நிகழ்ச்சி தோழியை அறத்தொடு நிற்கவைத்து விடுகின்றது. ஒத்த தலைவன் ஒருவனும் தலைவி யொருத்தியும் காதல் ஒழுக்கத்தில் ஈடுபடுகின்றனர். தலைவன் விரைந்து வரைந்து கொள்ளவில்லை. கள

வொழுக்கம் நீடிக்கின்றது. அது அலராகின்றது. தலைவி கரந்தொழுகும் காமம் தானகவே அக்களவினை வெளிக்காட்டி விடுகின்றது கண், தோள், முலை முதலியன புணர்ச்சியால் ஏற்பட்ட கதிர்ப்பைப் புலப்படுத்துகின்றன. நற்றாயும் செவிலித்தாயும் அவள் தோற்றத்தில் வேறுபாடு காண்கின்றனர். இவ்வேறுபாடு எதனல் ஆயிற்று என அறியக் கட்டுவிச்சியை அழைத்து வினவுகின்றனர். இதற்குக் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் (குறு. 26, 'கட்டுவிச்சியை வினவிக் கட்டுக்காண்கிற காலத்துத் தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வம் என்று கூறக்கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது'' என்று துறை விளக்கம் தரப்பட்டுள்ளது. குறிஞ்சிப் பாட்டிலும் தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணம் 'அறியுநர் வினய்' அறிய முயலுங்காலே அறத்தொடு நிற்றல் நிகழுகின்றமை அறிதல் இயலும்.

கட்டுவிச்சி வினவிற்கு விடையளிக்கின்ருள். சிறுமுறத்து நெல்லைப் பரப்பித் தெய்வங்களை அழைத்துப் பாடுகின்ருள். முருகன் மேயும் மைவரை நிலமாம் மலை நிலத்தை குன்றுவளத்தைக் குறித்துப் பாடுகின்ருள். அவள் குறிஞ்சி நிலக் கடவுளல்லவா? இறுதியிவ் முருகனல் நிகழ்ந்தது என்றே கூறி முடிக்கின்ருள்- இதனை அகநானூற்றுப் பாடல் ஒன்றின் அடிகளும் உறுதிப் படுத்தி நிற்கின்றமை கண்டு மகிழத்தக்கதாகும்.

அறிந்தனள் அல்லள் அன்னை வார்கோல்
செறிந்திலங் கெல்வளை நெகிழ்ந்தமை நோக்கி
கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல பெண்டிர் பிரப்புளர் பிரீஇ
முருகன் ஆரணங் கென்றலின்.. ...... (அகம். 98)

கட்டுக் காணலும் அறத்தொடு நிற்றலும்

தோழி கூற்று நிகழும் இடங்களைக் குறிப்பிடும் தொல்காப்பியச் சூத்திரத்தின்

அவன்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்
பிறன் வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
(தொ. பொ. 112)

என்னும் அடிகட்குச் செவிலி அறிவரை வினஅய்க் குறிபார்க்கும் இடத்திலும் தோழி அறத்தொடு நிலை வகையான் குற்றந் தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டுச் சொல்லுதலுண்டு என்று இளம்பூரணர் உரை விளக்கம் தருகின்றார். மேலும் தொல்காப்பியம் தோழி அறத்தொடு நிற்றலைப்பற்றிக் கூறும்

அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி யென்ப
(தொ. பொ. 203)

என்னும் சூத்திரத்திற்குப் பொருள் கூறிய நச்சினார்க்கினியர் "கட்டுக் காணிய நின்றவிடத்து அறத்தொடு நின்றது" என்று ஒரு பகுதியினைப் புலப்படுத்தக் காட்டிக் கட்டுக் ககண்டல் அறத்தொடு நிற்றற்குக் காரணமாதல் உண்டு என்பதனை உறுதிப்படுத்துகிறார்.

தலைவியின் வேறுபாட்டிற்கு உண்மைக் காரணத்தை நன்கு அறிந்தவள் தோழி. கட்டுவிச்சி வேறுபாடு முருகனால் நிகழ்ந்தது என்று கூறிவிட்டாள். தாயர் வெறியாட்டிற்கு உடன்படுவர். (தொ. பொ 109) தலைவி வெறியாட்டிற்கு மிகவும் அஞ்சுகின்றாள். (தொ. பொ. 109) அது நிகழின் அலர் அச்சத்தால் தலைவி இறந்துபடுவள் என்பதைத் தோழி நன்கறிந்தவள். எனவே அறத்தொடு நிற்கின்றாள். அவன் குறிஞ்சி நிலத்தலைவன் அல்லவா? முருகனை அழைத்துப் பாடும் அகவன் மகள் முருகன் உறை குறிஞ்சி நிலத்தையல்லவா பாடினாள்? அது தலைவன் உறையும் மலை நிலமே. அவர் குன்றத்தைப் பாடினால், அவள் நோய் நீங்கும் என்பதைக் குறிப்பாக உணர்த்தும் வகையில், அகவன் மகளின் இயல்பையெல்லாம் எடுத்துக் காட்டித் தோழி அகவன் மகளையே அழைத்து, அறத்தொடு நிற்கும் பேராற்றல் பின்வரும் குறுந்தொகை பாடலில் சிறக்க அமைகின்றது.

அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்நெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே (குறு. 23)

அவர் நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டு என்றதும் எவர் குன்றம்? என்ற வினு எழும். அவ்வினுவின் விடையே தலைமகளின் வேறுபாடு குறிஞ்சி நிலத் தலைவன் ஒருவனுல் நிகழ்ந்தது என்பதைத் தாயர் தெளிவுற அறிந்து கொள்ள உதவுகின்றது. இக் குறுந்தொகைச் செய்யுள் கட்டுக்காண நின்றவிடத்து, தோழி அறத்தொடு நின்றதற்கு இலக்கியமாக அமைகின்றது.

இடைக்காலம்

சங்க காலத்திற்குப் பின்னரும் கட்டுக் காணும் வழக்கம் தமிழ் மக்களிடையே காணப்பட்டமைக்கு இலக்கியச் சான்று உள்ளன. இடைக்காலத்திலும் தலைவியின் வேறுபாட்டின் காரணம் அறியவே கட்டுக் கண்டனர். இடைக்கால இலக்கியத்தில் கட்டுப் பார்ப்பவள் கட்டறி மகடூஉ, கட்டுவித்தி, கட்டுவிச்சி என்றெல்லாம் பெயர் பெற்றுள்ளாள்.

பெருங்கதை என்னும் நூலில் கட்டுப் பார்த்த மகள் கட்டறி மகடூஉ எனப் பெயர் பெற்ற செய்தியும் அவள் கட்டுக் கண்ட வகைபற்றிய செய்தியும் உள்ளன. சேரிவாழ் மூதாட்டியிடம். முறத்தில் நெல்லைப் பரப்பி. அவள் தெய்வங்களை அழைத்துப் பாடி அந்நெல்லினை எண்ணிப்பார்த்து நிமித்தம் அறிந்து கூறக் கேட்கும் வழக்கம் இருந்தமையைப் பின்வரும் அடிகள் குறித்து நிற்கின்றன.

> சேரி யாயத்துச் செம்முதிர் பெண்டிரொடு
> கட்டறி மகடூஉக் கடிமுறத் திடட
> வட்ட நெல்லு மாண்பில பெரிதெனக்
> குற்ற முண்டெனிற் கூறுமின் எமக்கென
> (பெருங்கதை 37. 235—238)

திருக்கோவையார் என்னும் நூலின்கண் மாணிக்கவாசகர் வரைபொருட் பிரிதல் என்னும் பகுதியில் 'கட்டு வைப்பித்தல்' (283) 'கட்டுவித்தி கூறல்' (285) என்னும் துறைகள் அமைத்துள்ளார். 7 'கட்டு வைப்பித்தல்' என்னும் துறைக்கு நூலின் உரையாசிரியர் 'மெலிவு கண்ட செவிலி அவளது பருவங் கூறி, இவ்வணங்குற்ற நோயைத்தெரிய வறிந்து சொல்லுமினென. கட்டுவித்திக்கு உரைத்துக் கட்டு வைப்பியா நிற்றல்'' என விளக்கம் தருகின்றுர் இதற்கு எடுத்துக்காட்டாக

குணங்குற்ற கொங்கைகள் சூதுற் றிலசொற் றெளிவுற்றில
குணங்குற்றங் கொள்ளும்பருவ முருள்குறு காவசுரர்
நிணங்குற்ற வேற்சிவன் சிற்றம்பலநெஞ் சுருதவர் போல்
அணங்குற்ற நோயறி வுற்றுரை யாடுமி னன்னையரே

என்ற செய்யுள் தரப்பட்டுள்ளது மேலும் இதன் கொளு மால் கொண்டகட்டுக் கால்கொண்டது எனக் குறிக்கப்பட்டுள்ளது.

'கட்டுவித்தி கூறல்' என்னும் துறைக்கு நூலின் உரையாசிரியர் 'தோழி கலக்கமுற்று நிற்ப, இருவரையும் நன்மையாகக் கூட்டுவித்த தெய்வம் புறத்தார்க்கு இவ்வொழுக்கம் புலப்படாமல் தானிட்ட நெல்லின்கண் முருகணங்கு காட்ட, இதனை யெல்லீருங் காண்மின், இவளுக்கு முருகணங்கொழிய பிறி தொன்றுமில்லையெனக் கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறு நிற்றல்'' என விளக்கம் தந்துள்ளார். இதற்கு எடுத்துக் காட்டிலக்கியமாக மாணிக்கவாசகர்,

குயிலிதன் றேயென்ன லாஞ்சொல்லி கூறன்சிற் றம்பலத்தான்
இயலிதன் றேயென்ன லாகா விறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லிற் றோன்று மவன்வடிவே

என்னும் பாடலைந் தந்துள்ளார். இதற்குக் 'கட்டுவித்தி, விட்டுரைத்தது' என்பது கொளுவாகத் தரப்பட்டுள்ளது.

எனவே திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் தரும் இரு துறைகளாலும், அவற்றின் இலக்கியச் செய்யுட்களாலும், கொளுக்களாலும் விளக்கவுரையாலும் தலைவியின் மெலிவை கட்டுவித்திக்கு உரைத்துக் கட்டுக்காணும் வழக்கமும், கட்டுவித்தி நெற்குறியால் முருகன் வடிவு கண்டு கூறும் வழக்கமும் அவர் காலத்தில் நிலைபெற்றிருந்தமை புலப்படுகின்றது.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் சிறிய திருமடலிலும் திருவாய் மொழியிலும் கட்டுவிச்சி கட்டுப்பார்த்துக் குறி கூறும் செய்தி கூறப்பட்டுள்ளது. சிறிய திருமடலில்

....கட்டுவிச்சி கட்டேறிச் (20)
சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைமோவாப் (21)
பேரா யிரமுடை யானென்றாள்...................... (22)

எனவும், திருவாய்மொழியில்

இதுகாண்மி னன்னைமீர் இக்கட்டுச்சி சொற்கொண்டுநீர்
எதுவானுந் செய்தங்கோர் கள்ளுமிறைச்சியுந் தூவேன்மின்
(4, 6. 3)

எனவும் அமைகின்ற அடிகளால் கட்டுவித்தி கட்டுவிச்சி எனத் திரிந்து வழங்கியதையும், முறத்தில் நெல்லைப் பரப்பி அவள் கட்டுக் கூறியதையும் அறிதல் இயலும்.

பிற்காலம்

பிற்காலத்தில் தோன்றிய கலம்பகம், குறம், குறவஞ்சி முதலிய சிற்றிலக்கியங்களிலும் கட்டுவிச்சி கூறல், குறத்தி குறி கூறல், நாட்டுவளங்கூறல், மலை வளங் கூறல் போன்ற துறைகள் அமைக்கப்பட்டுள்ளன நந்திக் கலம்பகத்தில் தலைவி கூற்ருக நிகழும் வெறிவிலக்கல் விளம்புகின்ற பாடல் ஒன்றில், நூலின் உரையாசிரியர் 'கட்டுவித்தி (சாமியாடுவோள்) முருகணங்கென்று கூறக்கேட்டு இப்பாலன் இக்குடியின்கட் பிறந்து நம்மை இவ்வாறு நிற்பித்த பண்பினுக்கு வேலன் புகுந்து வெறியும் ஆடுக, அதன்மேல் மறியும் அறுக்கவெனத் தாயர் வேலனை அழையாநிற்றல், என்று கூறலான் அறிக வெனக் குறிப்பிட்டுள்ளார். [8] இச்செய்தியும் கட்டுவிச்சி குறியறிந்து கூறுகின்ற வழக்கம் தொடர்ந்து நிகழ்ந்துள்ளமைக்குச் சான்ருயுள்ளது.

மீனட்சியம்மை குறம் என்னும் நூலில் இக்கட்டுவிச்சியைப் பற்றிய சில செய்திகள் கிடைக்கின்றன.

முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லை முன்னேவை யம்மே
இந்நாழ் நெல்லையுமுக் கூறுசெய்தோர் கற்றை
இரட்டைபட வெண்ணினபோ தொற்றைபட்ட தம்மே
உன்ருமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்
உனக்கினியெண் ணினகரும மிமைப்பினிற் கூடும்
என்னுணை யெங்கள்குலக் கன்னிமா ரறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகா ணம்மே
(மீனட்சியம்மை குறம். 26)

முறத்திலிட்ட ஒருபடி நெல்லை முக்கூறு செய்து. ஒரு கூற்றை இரண்டிரண்டாக எண்ணியக்கால் இறுதியில் ஒற்றைப் பட்டு நின்ருல் எண்ணிய கருமம் கைகூடும் என்று கூறுகின்ருள் குறமகள் என்பது அறியப்படுகின்றது.

குற்ருலக் குறவஞ்சியின்கண் குறத்தி ஓரு நாடகப் பாத்திர மாகக் கொள்ளப்படுகின்ருள். 'அவள் மாத்திரைக்கோல் ஒன்று வைத்திருப்பாள்; கூடை ஒன்றும் ஏந்தியிருப்பாள். அவள் மலை வளம் நாட்டுவளம் முதலியவற்றைக் கண்டு கூறுபவள்' போன்ற செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

இக்காலம்

கட்டுக் காணும் வழக்கம் இன்னும் பெரும்பாலும் நாட்டுப் புறங்களில் நிலைபெற்றுள்ளமையைக்காணலாம், எனினும் கட்டுக் காணல் பண்டைக் காலத்தில் நிகழ்ந்த நோக்கத்தோடு இக்காலத்தில் நடைபெறவில்லை. நோக்கம் பெரும்பாலும் வேறு பட்டுவிட்டது பெரும்பாலும் ஒரு குடும்பத்தில் நிகழப்போகும் நல்லன, தீயன அறிந்து கொள்ளும் நோக்குடன் கேட்கப்படு கின்றது. சிறுபான்மை பண்டை நோக்கத்துடன் தொடர்புடைய தாய், பூப்பெய்திய பருவமங்கையர்க்கு மணவினை நிகழப்போகும் காலம், ஏற்புடை மணமகன் பற்றிய செய்திகளும் வினவப்படு கின்றன. அத்தோடு இன்று 'கட்டு' என்ற பெயா வழங்கப் படவில்லை. அதற்குப் பதிலாகக் குறிகூறல், குறிபார்த்தல், குறிசொல்லல். குறிகாணல் என்னும் குறியீடுகளே வழக்கில் உள்ளன. குறிசொல்ல வினவுதல் 'குறி கேட்டல்' எனப்படு கின்றது. இக்காலத்தில் குறிகூறும் பெண் குறத்தி அல்லது குறமகள் எனப்படுகின்ருள்.

முடிவுரை

அகவன் மகள், கட்டறி மகடூஉ, கட்டுவித்தி, கட்டுவிச்சி, குறமகள், குறத்தி என்பன அனைத்தும் ஒருவரைக் குறிக்கும் பல பெயர்களேயாகும். கடவுளை அகவி அழைத்துப் பாடுவதால் அகவன்மகள் எனவும், கட்டுப்பார்த்தலை அறிந்தவளாதலின் கட்டறி மகடூஉ, கட்டுவித்தி, கட்டுவிச்சி எனவும், குறிசொல்லு தலால் குறத்தி எனவும், காலப்போக்கில் அவளை மக்கள் வெவ் வேறு பெயர்களால் அழைத்தனர் என்பதும் அம்மகள் கண்ட கட்டினைப் பிற்காலத்தவர் 'குறி' என்று அழைத்தனர் என்ப தும் இவண் தெளிவாகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. குறுந்தொகை 23. 298

வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசின் மானப்
பிறிதொன்று குறித்தவ ணெடும்புற நிலையே
(குறு. 298. 6—8)

2. தமிழ்ப் பேரகராதி, தொகுதி பக். 15
3. குறுந்தொகை 23, 298, அகம். 97,152,208
4. நற்றிணை 288, அகம். 22,98. குறுந்தொகை 23.
5. தமிழ்ப் பேரகராதி, தொகுதி பக்கம். 651.
6. பிரப்பு அகம். 98,242; குறு. 242· திரு முருகு. 233 — 234, 242 — 244.

பிரப்பு என்பது தானியங்களைப் பலியாக வைத்தல்; தெய்வத்திற்குப் பலியாக அரிசி. தினையரிசியைப் படைத்தலும் உண்டு. அரிசி, தினை முதலியவற்றைப் பல பகுதியாகக் கூடையிலாதல் முறத்திலாதல் பலியாக இட்டு வைத்தல். பிரப்புக் கூடை என்ற வழக்கானும் உள்ளது.

7. திருக்கோவையார் 284. கொளு: தெய்வத்தின் றெரியுமென எவ்வத்தின் மெலிவுற்றது.

8 நந்திக்கலம்பகம், கழகவெளியீடு. 1968. பக். 109.

இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 33-ஆம் ஆண்டுத் தொடக்க விழா, திருவள்ளுவராண்டு 2002 ஆவணித்திங்கள் 11-ஆம் நாள் (27—8—71) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில் கழகத் தலைவர், பேராசிரியர் ஜெ. ஆர். ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதிராம்பட்டினம் காதர் மூகைதீன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. அப்துல் கறீம் அவர்கள் தொடக்க விழா உரையாற்றினார்கள். மாணவி கல்யாணி இறை வணக்கம் பாடியபின் கழகச் செயலாளர் சி. பெ. தமிழ்வாணன் வரவேற்புரை நிகழ்த்தினர். தலைவர் தம் உரையில் இளங்கோவடிகள் தமிழ்க் கழகம், தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் வகுத்த நெறி நின்று தமிழ்ப் பணி புரிவதையும் பிறபணிகளையும் குறிப்பிட்டார். சிறப்புரையாற்றிய பேராசிரியர் அப்துல் கறீம் அவர்கள் 'இலக்கியம் வேண்டும்' என்னுந் தலைப்பில் மனித வாழ்க்கையை இலக்கியம் செம்மைப் படுத்துவதைப் பல சான்றுகளைக் காட்டி நிறுவினர். மாணவி மகாலட்சுமி நன்றி கூறியபின் சங்க வாழ்த்து நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

திரு. சா. குருமூர்த்தி, எம். ஏ., எம். லிட்.,
டிப்ளமா. மானிடயியல்.
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

தமிழகத்தில் அகழ்வாராய்ச்சி :

அலகரை : திருச்சி மாவட்டத்தில், முசிரி வட்டத்தில் காவிரி யாற்றின் வடகரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். காவிரியாற்றின் அலைகள் மோதுகின்ற கரையில் அமைந்திருப்பதால் இவ்வூர் அலகரை (அலைகரை) எனப் பெயர் பெற்றது போலும் தென்கரையில் உள்ள திருக்காம்புலியூரிலிருந்து இவ் வூர் 7 கல் தொலைவில் உள்ளது. [1] இங்கு அகழ்ந்தெடுக்கப் பட்ட தொல் பொருள்கள் திருக்காம்புலியூர் அகழ்வாராய்ச்சி காட்டும் பழந்தமிழர் நாகரீகத்தை விரிவுபடுத்தி, விளக்கிக் கூறப்பயன்படுகின்றன. இரண்டு ஊர்களும் ஒரே காலவரம் பிற்கு உட்பட்டவையாகும். காவிரியாற்றின் எதிர்க்கரைகளில் அமைத்திருந்தாலும், இவை காட்டும் பண்பாடும் ஒன்றேயாகும். கி. பி. இரண்டாம் நூற்றுண்டுக்குட்பட்ட எழுத்துக்கள் பொறிக் கப்பட்ட பானை ஓடுகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. அழகிய சுடுமண் தெய்வத்திருமேனிகளும், பளபளப்பான வண்ண ஓவியங்கள் தாங்கிய பானை ஓடுகளும் இவ்வூரின் பண்டையப் பெருமையை பறை சாற்றுகின்றன.

உறையூர் : முற்காலச் சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூர் சங்க காலத்தில் தலைசிறந்த வாணிகத்தலமாக விளங் கிற்று பழங்காலத்தில் கோழியூர் என அழைக்கப்பட்டது. சங்க இலக்கியங்கள் சிலவற்றில் இவ்வூரின் சிறப்பு விளக்க மாகக் கொடுக்கப்பட்டுள்ளது. உறையூர் பல முதுபெரும் புல வர்களை நாட்டிற்குத் தந்துள்ளது ; நீதியின் உறைவிடமாகத் திகழ்ந்தது இத்தகைய வரலாற்றுப் பெருமை பெற்ற, உறை யூரில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது சாலச் சிறந்த ஒரு செயலாகும். [2] ஆதி உறையூர் மக்களின் அன்றுடப் பழக்க

1. Dr. T. V. Mahalingam, **Excavations in the Lower Kaveri Valley**, Madras University. 1970.
2. சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை இங்கு அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது (1964—69).

வழக்கங்கள், மொழி, சமய வாழ்க்கை, உரோமாபுரி மக்களுடன் அவர்கள் கொண்டிருந்த நட்பு, உறவு ஆகியவைப்பற்றிய அரிய சுவையான குறிப்புகளை அகழ்வாராய்ச்சி நமக்கு நல்கு கின்றது. கி. மு. 3-ம் நூற்றுண்டுக்கும் கி. பி. 14-ம் நூற் ருண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த உறையூர் மக்கள் பண்பாட்டு வரலாற்றினை அகழ்வாராய்ச்சி படம் பிடித்துக் காட்டுகின்றது. இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் களுள் உரோமர்கள் பயன்படுத்திய சாயத் தொட்டி (Dyeing Vat) 'ரௌலடெட்' என்னும் மட்பாண்ட வகைகள், பிராமி எழுத்துக்களைத் தாங்கிய பானை ஓடுகள், சுடுமண் உருவங்கள், காதணிகள், பலவண்ணக் கற்களினுல் செய்யப்பட்ட சின்னஞ் சிறு மணிகள், சங்கு வளையல்கள், இரும்பு செப்புப் பொருள் கள் போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். உரோமர்களது சாயத் தொட்டியும், பானை வகையும் அம்மக்கள் இவ்வூருடன் கொண்டிருந்த தொடர்பினைக் காட்டுகின்றன அகழ்வாராய்ச்சி யின்படி இவற்றின் காலம் கி. பி. 2-ம் நூற்ருண்டெனக் கணிக் கலாம். ஆடைநெய்தல் அவற்றுக்குச் சாயம் பூசுதல் போன்ற தொழில்களுக்குப் பெயர் பெற்ற நகரமாக உறையூர் விளங்கி யிருத்தல் வேண்டுமென்ற கருத்தை இக்கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்துகின்றன. இன்றைய உறையூர் கைத்தறிச் சேலை களைப்பற்றித் தெரியாத மகளிர் நம் நாட்டில் இருப்பர் என்பது அரிதாகும். உரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் களின் பட்டியலில், இவ்வூர் கைத்தறி ஆடைகளும் இடம் பெற் றிருக்கவேண்டும். இதுபோலவே பலவண்ணக் கற்களினுல் செய்யப்பட்ட மணிகளை உரோமர்கள் பெரிதும் விரும்பி வாங்கி யிருத்தல் வேண்டும். சுடுமண் தாயக்கட்டைகள் செஸ்காய்கள்' உருண்டை வடிவ எடைகள் போன்ற அரிய பொருள்களும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பழைய உறையூரின் அழிவைப் பற்றியும் அகழ்வாராய்ச்சி ஓர் உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட குழிகளில் மணலும், களிமண்ணும், அடுக்கடுக் காக அடுத்தடுத்துக் காணப்பட்டன இவற்றின் இடையே சிறியதும், பெரியதுமான கருங்கற்கள் புதையுண்டிருந்தன. ஒரு பெரிய வெள்ளப்பெருக்கினுல் இந்நகரின் புறப்பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையே இவை புலனுக்கு கின்றன. அகழ்வாராய்ச்சிகணிப்புப்படி இவ்வடுக்குகளின்காலம் கி. பி எட்டு அல்லது ஒன்பதாம் நூற்ருண்டாகும். இங்கு ஏற்பட்ட வெள்ளச் சிதைவைப் பற்றி ஒரு கல்வெட்டு குறிப்பு

களை நல்குகிறது. உறையூருக்கு வடமேற்கில் சுமார் நான்கு கல் தொலைவில் உள்ள அல்லூரில் கண்டெடுக்கப்பட்ட இக் கல்வெட்டில், "காவிரியாற்றின் வெள்ளப் பெருக்கினால் அல லூரும் அதன் சுற்றுப்புறமும் அழிந்துபோக நேர்ந்தது " என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் காலம் ஏறக்குறைய கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு எனலாம். எனவே சங்க காலத்தில் உறையூர், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் காவிரியாற்றின் சீற்றத்திற்குள்ளாகி அதனால் சிதைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை உறையூர் மண் தன்னுள் மறைத்து வைத்துக்கொண் டிருந்தது. இப்பொழுது அகழ்வாராய்ச்சி அம்மண் மறைக்க முற்பட்ட இரகசியத்தை வெளிப்படுத்தியுள்ளது. மண்ணுள் ஆராய்ச்சியின் மகத்தான சாதனையை மக்கள் அறிய இது ஒரு வாய்ப்பல்லவோ :

காவிரிப்பூம்பட்டினம்: காவிரிப்பூம்பட்டினம் சோழ மன்னர்க் குரிய தலைமை நகரங்களுள் ஒன்றாகவும், நம் நாட்டு வாணிக வளர்ச்சிக்குரிய கடற்றுறைப் பட்டினமாகவும் விளங்கிற்று. மேனாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த யவன ஆசிரியராகிய தாலமி என்பவர் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளிலும், "பெரிபுளூஸ்" என்ற நூலிலும் இப்பட்டினத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் ஆட்சி புரிந்த கரிகால வளவன் காலத்தில் இவ்வூர் விழாக் கோலம் பூண்டிருந்தது. காவிரியாறு கடலோடு கலக்கும் நிலப்பகுதியில் அமைந்தமையால் புகார் என வழங்கப் பெறு வதாயிற்று.

இந்நகர் சங்க காலத்தில் புத்த சமய இருப்பிடமாகவும், ஒரு துறைமுகப்பட்டினமாகவும் திகழ்ந்தது. இந்த இரண்டு கருத்துக்களையும் உலகுக்கு உணர்த்தும் வகையில் அரிய சில உண்மைகளை அகழ்வாராய்ச்சி தந்துதவியுள்ளது.[3] இடிந்த புத்த விகாரங்கள், புத்தருடைய திருமேனி, திருவடிகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் சுமார் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. உரோமர்களது 'ரௌலடெட்' மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன, மண்ணுக் கடியில் ஓடும் கழிவு நீர்க்குழாய்கள் நீர்தேக்கச் சுவர்கள், அழ கிய சுடுமண், களிமண், உருவங்கள், மணிகள், சங்கு வளை யல்கள் வெண்கல உருவங்கள், சோழர் காசுகள் போன்ற பண்பாட்டுச் சின்னங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

---

3. **Indian Archaeology** — A Review, 1964–65; 1965–66.

வேற்று நாடுகளிலிருந்தும், உள் நாட்டின் பல பகுதிகளி லிருந்தும் புகார் துறைமுகத்தில் வந்து குவிந்த பொருட் குவியல்களைப் பட்டினப் பாலையில் கீழ்க்கண்டவாறு உருத்திரங் கண்ணனார் விளக்கியுள்ளார்.[4]

"நீரின் வந்த நிமிர் பரிப்புரவியும்
காலின் வந்த கருங்கற் முடையும்
வடமலைப் பிறந்த மணியும், பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனர்தலை மறுகின்"

கடல் வாணிகத்தால் இந்நகரில் வந்து குவிந்த செல்வ வளத் தைச் சிலப்பதிகாரம் சிறப்புறக் காட்டுகிறது :—

"முழங்கு கடல் ஞாலம் முழுதும் வரினும்
வழங்கத் தவா வளத்த தாகி
அரும் பொருள தரூஉம் விருந்திற்றேஎம்
ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்" [5]

எனவே பூம்புகாரில் பல நாடுகளிலிருந்து வந்த வணிகப் பெருமக்களின் போக்குவரத்து இருந்திருக்க வேண்டும் எனத் தெரிய வருகிறது. இக்கருத்தினை மெய்ப்பிக்கும் வகையில் அங்கு கண்டெடுக்கப்பட்ட உரோமர்களது மட்பாண்ட வகை கள், சான்றுகளாக அமைந்துள்ளன. இவ்வூரின் பழம் பெரு மையை உணர்த்தும் வகையில் இங்கு ஒரு கலைக்கூடம் அமைக் கப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் : காஞ்சிபுரத்தின் வரலாற்றில் தமிழகத்தின் அர சியல் வரலாறு பின்னிப் பிணைந்துள்ளது என்று கூறலாம், இங்கு பல்வேறு அரசு மரபுகளுக்குரிய கலைக்கோயில்களை ஒன் றும் காணலாம். இந்நகரின் அமைப்பையும், வரலாற்றுச் சிறப் பையும் பல மேல்நாட்டு அறிஞர்கள் பாராட்டியுள்ளார்கள்.

4. பட்டினப்பாலை ; 185 — 193.
5. சிலப்பதிகாரம், மனையறம், 3—6

இந்நகர் அரசு இருக்கையாக, அறிஞர்கள் இருப்பிடமாக, கல்வி நிலையமாக, ஆலய நகராக, பல சமயங்களின் உறைவிடமாக, புலவர்களின் கற்பனைக்கு ஒரு கருவூலமாகத் திகழ்ந்தது. இன்று தமிழகத்தில் இது பழமையும், புதுமையும் இணைந்து காணப்படும் ஒரு தலைசிறந்த நகராகும். விண் மறைக்கும் கோபுரங்களும், வினை தீர்க்கும் கோயில்களும் நிறைந்து காணப்படும் காஞ்சி மண்ணில் அகழ்வாராய்ச்சியை மேற் கொண்டது சாலச் சிறப்புடையதாகும்.

இராசசிம்மர் கோயிலுக்கு அருகிலுள்ள பல்லவமேடு என்ற இடத்திலும், சங்கரமடத்தினுள்ளேயும்,[6] காமாட்சி அம்மன் கோயிலுக்கு அருகிலும் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது.[7] உரோமர்களின் 'ரௌலடெட்' 'அர்ரிடைன்' 'ஆம்போரா' போன்ற மண்பாண்டங்களும், சாதவாகனர், பல்லவர் காசுகள், சின்னஞ்சிறு சுடுமண் பொம்மைகள், இரட்டை மீன், ஆமை, 'ஸ்ரீ வத்சம்' வடிவங்களில் செய்யப் பட்ட அணிகலன்கள், சங்க கால வேந்தர்களின் உருவங்க ளென வியக்கும் வண்ணம் முடி அலங்கரிக்கப்பட்ட சுடுமண் ஆண் உருவங்கள், பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் ஸ்தூபி வடிவங்கொண்ட பானை மூடிகளின் கைப்பிடிகள், புத்த துறவிகள் பயன்படுத்திய 'கமண்டலம்' பன்னீர்க் கூசா போன்ற பாத்திரங்களின் உடைந்த பகுதிகள், அகல் விளக்குகள், அழகிய வண்ணக்கற்களால் செய்யப்பட்ட மணிகள், சங்கு வளைத்துண்டுகள் போன்ற தொல்பொருள்கள் கிடைத்துள்ளன இவற்றின் மூலம் உரோமாபுரியுடன் காஞ்சி மக்கள் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது களிமண்ணில் கண்கவரும் பொம்மைகளைச்செய்யும் கலையில் காஞ்சி பெயர் பெற்றிருக்க வேண்டும். ஒரு சில ஆண் உருவங்களுக்கு, பல மடிப்புகளைக் கொண்ட ஒருவிசிறிபோன்று முடி ஒப்பனை செய்யப்பட்டுள்ளது. அக்காலத்திய குறுநில மன்னர்களை நினைவுபடுத்துகின்றன இவ்வுருவங்கள். கி. பி. இரண்டு, அல்லது மூன்றும் நூற் றூண்டில் கோலோச்சியபாண்டியஅரசு மரபைச்குறிக்கும்வகையில் அமைந்துள்ளது இரட்டை மீன் வடிவ அணிகலன். இவற்றைத்

---

6. **Indian Archaeology**, A Review, 1962—63, P. 12

7. இங்கு சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆய்வுத் துறை அகழ்வாராய்ச்சி நடத்தியுள்ளது, தொடர்ந்து அகழ் வாராய்ச்சி நடத்தப்படவிருக்கிறது

தவிர சுடுமண் மணிகள், முத்திரைகள்,எடைகள், காதணிகள் விளையாட்டுப் பொருள்கள் போன்றவை நூற்றுக்கணக்கில் கிடைத்துள்ளள.

காமாட்சி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் நிகழ்த்தப் பட்ட அகழ்வாராய்ச்சியில் செங்கற்களால் கட்டப்பட்ட வட்ட வடிவமான புத்த ஸ்தூபியின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டுள் ளது. மண்ணுள் 16 அடி ஆழத்தில் இது காணப்பட்டது. செங்கற்கள் ஒவ்வொன்றும் 20 அங்குல நீளமும் 10 அங்குல அகலமும், 3 அங்குல உயரமும் கொண்டுள்ளது. இத்தகைய பெரிய செங்கற்களைக்கொண்டே அக்காலக் கட்டடக் கலையின் மேன்மையை நாம் ஒருவாறு ஊகித்து உணரலாம். இந்த ஸ்தூபியின் முன்பகுதியில் மூங்கில் அல்லது மரக் கால்களைத் தாங்கும் குழிகள் பல காணப்பட்டன. எனவே ஸ்தூபிக்கு முன்னால் ஒரு பந்தல் போடப்பட்டிருக்கலாம் என்று கருத தோன்றுகிறது அகழ்வாராய்ச்சிக் கணக்குப்படி, இந்த ஸ்தூபி கி.மு முதல் அல்லதுகி பி. முதல் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் இலக்கியங்களும், சீனப்பயணி யுவான்சுவாங்கும் குறிக்கும் புத்தக் காஞ்சி, செங்கை மாவட்டத்தின் உள்ள இவ்வூரே என்பதைத் தெளிவாக இன்று நாம் உணருகிருேம் புத்த மதத்தின் வளர்ப்பிடம் என்று போற்றப்படுகின்ற இக்காஞ்சியில் ஒரு ஸ்தூபிகூட காணப்படவில்லை. எனவே யுவான் சுவாங்கால் வருணனை செய்யப்பட்டுள்ள காஞ்சிபுரம் இதுவல்ல என ஒருசில அறிஞர்கள் வாதாட முற்பட்டனர். இவர்களது வாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்துள்ளது காஞ்சி மண்ணில் நிகழ்த்தப்பட்ட அகழ்வராய்ச்சி. இன்றும் காஞ்சியில் ஒரு சில இடங்களில் புத்தரின் மிகப் பெரிய கல் உருவங்கள் கேட் பாரற்ற நிலையில் சிதறிக் கிடக்கின்றன. இவற்றின் காலம் ஏறக்குறைய கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டெனலாம். இங்கு கிடைத்துள்ள பல்வகைத் தொல்பொருள்களை ஆய்ந்தால் கி. மு. 3-ம் நூற்றுண்டிற்கும் கி பி. 14-ம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் காஞ்சி மக்களின் பண்பாட்டுப் பெரு மையை நாம் ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளலாம்.

கொற்கை :

கொற்கைப் பட்டினத்தைச் சுற்றிலும் வரலாற்றுப் புகழ் பெற்ற பல ஊர்கள் நிறைந்துள்ளன. இவற்றுள் இடைக் கற்கால ஊராகிய சாயர்புரமும், ஆதிச்சநல்லூரும் குறிப்பிடக் தக்கவை தாலமியின் குறிப்புகளிலும் 'பெரிபுளூஸ்' என்னும்

பழைய நூலிலும் இவ்வூரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. துறைமுகப் பட்டினத்தில் முத்துக்குளிப்பு செவ்வனே நடைபெற்று வந்தது. பாண்டியர்களின் கடற்றுறைப் பட்டினமாகத் திகழ்ந்த கொற்கையைப் புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். பாண்டிய வேந்தர்கள் தங்களைக் "கொற்கை வேந்து" "கொற்கை கோமான்" என்று அழைப்பதில் பெருமை கொண்டிருந்தனர். அரசர்கள் தங்கள் பெயர்களை இவ்வூரின் பெயருடன் இணைத்துக்கொண்டனர், என்ற ஒன்றே இவ்வூரின் பெருமையை விளக்கப் போதுமான சான்றாகும்.

இவ்வூரின் தொன்மையை முதன்முதலில் நமக்கு அறிவித்தவர் மேலைநாட்டு அறிஞரான கால்டுவெல் என்பவராவர். அவர் 1876-ஆம் ஆண்டு இங்கு தொல்பொருளாராய்ச்சியை மேற்கொண்டார். அண்மையில் தமிழ் நாடு அரசு தொல்இயல் ஆய்வுத் துறை இங்கு அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது[8] அறிவியல் முறைப்படி நடத்தப்பட்ட கார்பன் 14 (Carbon 14 dating) சோதனைப்படி, இங்கு மக்கள் கி. மு. 785-ஆம் ஆண்டிலேயே வாழ்ந்து வந்தனர் என்று தெரியவருகிறது. இங்கு உரோமர்களின் பானை ஓடுகள். பிராமி எழுத்துக்களைத் தாங்கிய பானை ஓடுகள், முதுமக்கள் தாழிகள் போன்றவை கிடைத்துள்ளன. மௌரிய காலத்திற்குட்பட்ட வடநாட்டுக் கறுப்புப் பானை வகையைச் சேர்ந்த ஓடு ஒன்றும் கிடைத்துள்ளது. இப்பட்டினத்தின் தொன்மையை விளக்க இவற்றைவிட வேறு சான்றுகள் வேண்டுமோ?

மேற்கூறிய ஊர்களைத் தவிர கட்டபொம்மன் வாழ்ந்த ஊரான பாஞ்சாலங்குறிச்சியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி தந்துள்ள அரிய குறிப்புகளைக் கொடுத்தால் தான் "தமிழகத்தில் அகழ்வாராய்ச்சி" என்ற தலைப்பு முழுமையுள்ளதாகக் கருத முடியும். கட்டபொம்மன் மரபின் பண்பாட்டுப் பெருமையைப் பறை சாற்றும் வகையில் அவன் வசித்த அரண்மனைப் பகுதிகள், அவனது குடும்பத்தார் பயன்படுத்திய பாத்திர வகைகள், கருவிகள் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.[9] இக்கண்டுபிடிப்புகள், கட்டபொம்மன் தமிழக வரலாற்றில் ஒரு நிலையான இடத்தினைப் பெறவேண்டியவன் என்பதை வலியுறுத்துகின்றன.

---

8. **Damilika**, (தமிழகம்), (1970), 50–54.
9. **Damilika**, (தமிழகம்), (1970), Plates 27a — 31b.

(முற்றொடர்ச்சி - துணர் சரு மலர் ச)

நாடகக் கலை முன்னோடி

டாக்டர். சாலை இளந்திரையன் பி. எச். டி.
தில்லிப் பல்கலைக் கழகம்.

விசுவாசகாதகன்

மனிதனுக்கு என்று ஒரு நிலை உண்டு; அதற்குக் கீழே போய் விட்டால் அவனிடம் தரமான நடத்தை எதையும் எதிர் பார்கக இயலாது. இந்தக் கருத்தின் மேல் விசுவாசகாதகனின் பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. "எண்ணாத பொருள் இருந்தும் எக்சுபென் (Expense) சுக்கில்லை என்றே, பிண்ணாக்கைத் தின்னும் டர்ட்டி பீசுடு (Dirty Beast) கள் போலல்லாமல், கண்ணாட்டிமாராம் டான்சிங்கரல் (Dancing Girl) களைக் கூடி நாமும் அண்ணாத்தை மாரே இன்று ஆப்பி (Happy) யாய் இருப்போம் வாரீர்[28] என்பதுதான் விசுவாசகாதகனின் வாழ்க்கைநெறி. இந்தப் போக்கை மேற்கொண்டவனுக்கு ஒழுக்கம், உயர்வு, பண்பாடு என்பவைகளைப் பற்றிக் கவலை இல்லை. அவைகளை எல்லாம் ஒழித்துத் தலைமுழுகியவனாகவே இவன் செயல்படுகிறான்.

தன் மனைவியையே இவன் ஒரு வேலைக்காரி போலத்தான் நடத்துகிறான். இவனிடம் மிகுந்த அன்புகொண்டவளும், இவனாலேயே விரும்பிக் காதலிக்கப்பட்டவளுமான சோக்சுந்தரத்தையே பிரதாபனோடு பழகவிட்டு, பரத்தைத்தரகன் என்ற நிலைக்கு இறங்கி விடுகிறான் அவளைப் பிரதாபனோடு சரசமாட விட்டுவிட்டு, "பெடையுடன் இருந்த அன்னம் பிரிவினால் வருந்துமாபோல், இடை ஒரு பிடியடங்கும் என்தன் காதலியை விட்டே, படுவதற்கரிய துன்பம் படுகிறேன்.[29] என்று சொல்லும் அவன், அப்படிச் செய்ததற்காக நாணவில்லை; தன் உடற் பசியை நினைந்தே உருகுகிறான்.

பணத்தையும் அதனால் பெறும் இன்பத்தையுமே பெரிதாகக் கருதிவிட்டவர்கள் சமுதாயத்தில் எத்தனை கேடுகளை விதைக்

28. பிரதாபசந்திர விலாசம்; அங்கம் 2; களம் 2
29. பிரதாபசந்திர விலாசம்: அங்கம் 7; களம் 3

கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் துலங்குகிறான் விசுவாசகாதகன். ஒழுக்கமும் உயர்வும் உடைய ஒருவனிடமே நயவஞ்சக நாடகமாடி அவனைக் கெடுக்க இவன் தயங்கவில்லை. மனைவியைத் தனது ஆடம்பரத்துக்குத் துணையான பல கருவிகளில் ஒன்றாகவே கருதுகிறான். அவளுடைய நறுக்கான சொல்லடிகள் கொஞ்சமும் அவன் நெஞ்சில் தைக்கவே இல்லை.

'இந்தப் பாத்திரத்துக்கு (விசுவாசகாதகனுக்கு)க் கொடுக்கப்படும் முடிவு எதார்த்தமானதா? இத்தகையவர்கள் எதார்த்த வாழ்வில் அடிபடுகிறார்களா?' — இந்த அய்யம் எழவே செய்கிறது. ஆனால், அவன் வலையில் சிக்கிய பிரதாபனை விடுவிக்க ஆசிரியர் கையாண்ட தண்டமுறையையும் அதற்காகப் புகுத்தப்பட்ட (நிபுணர்) பாத்திரப் புதுமையையும் கவனிப்போர் இதை இயல்பான முடிவு என்றே ஏற்பார்கள். 'தருமம் தலை காக்கும்' என்ற செயல்மடிவுத் தத்துவம் படர்ந்த இந்த நாட்டில் நிபுணர் பாத்திரம் ஒரு புதுமை; வரவேற்கத்தக்க புதுமை,

பாத்திரப் புதுமை

இந்த நாடகத்தின் மற்றொரு புதுமை விசுவாசகாதகன் மனைவியின் பாத்திரம். கல்யாணமாகி விட்ட பெண்ணுக்குக் "கற்பு" என்னும் இறுகலான உடுப்பை மாட்டி, அவளை, அப்புறம் இப்புறம் திரும்ப முடியாத 'எந்திரப் பெண் பிள்ளை' யாக்கி வைப்பதே தமிழ் இலக்கிய மரபாக இருந்து வந்தது. கணவன் என்ன தீங்கு செய்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு தனக்குள் அழுது கழிவதே கற்புள்ள மங்கைக்கு விட்டவழி என்பதே, இங்கே இலக்கிய நீதியாகவும் இருந்தது. உறைந்து போன இந்த மரபை உடைத்துக்கொண்டு. புதுமைப் பைந்தளிர் நீட்டுகிறது பிரதாபசந்திர விலாசம்.

விசுவாசகாதகனின் நண்பர்களுக்கு விருந்து சமைத்துப் போட மறுக்கிறாள் அவன் மனைவி. விசுவாசகாதகனுக்குக் கோபம் வந்து விடுகிறது. வழக்கம் போலவே, "அடி என்னடி கொஞ்சமாவது மரியாதை இல்லாததே பேசுறாய்?" என்று ஏறுகிறான் இதைக் கேட்டதும் அவளுக்கு வந்துவிடுகிறது கோபம்; நெஞ்சில் கிடந்ததை எல்லாம் அப்படி அப்படியே அள்ளிக் கொட்டிவிடுகிறாள்:

"அட, சீ! தித்திச்ச மட்டும் சர்க்கரை. நீ எந்த மட்டும் பெண்சாதி பிள்ளை யெண்ணு பார்த்தையோ, அதுவரைக்கும்

உனக்கு எல்லா விஷயத்திலும் அடிமையாய் இருந்தேன். எப்போ தேவடியா நாரிகளுக்கு முறியாய் என்னையும் என் மக்களையும் தெருவில் விட்டையோ, அதுமுதல் உன்னிடத்தில் மரியாதை என்ன, கிரியாதை என்ன? குட்டிச்சுவருக்குத் தோரணமோ?" 30

அப்பட்டமான இந்த எதார்த்தப் பாத்திரத்தை இராமசாமிராஜு 1877ல் தமது நாடகத்தில் உலவ விட்டிருக்கிருர் என்பதை நினைக்க வேண்டும். கணவன்மார் எத்தனை இன்னல் செய்தாலும் "பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை" என்னும் (பெருங்கதை) மாயாவாதப் பழம்போக்கு ஒழிக்கப் பட்டு, 'பெண்ணுக்கும் இதயம் உண்டு,— விரக்தியின் எல்லையில் அந்தப் புலியும் சீறிப் பாயும்!" என்னும் எதார்த்தப் போக்கு இந்த நாடகத்திலேதான் முதல்முதலாக மேடை ஏற்றப்பட்டுள்ளது.

5

19ம் நூற்ருண்டுத் தமிழகத்தில் (இந்தியாவில்) படிப்பும் வசதியும் உடைய இளைஞர்கள் மத்தியில் தலை எடுத்த ஒரு குறிப்பிட்ட தீய பழக்கத்தையும் அதற்குத் துணை நின்று வயிறு வளர்க்கும் ஒரு தீமை வடிவத்தையும் சுட்டிக் குறித்தே நாடகக் கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டின் சேர்க்கையால் நல்ல இளைஞன் ஒருவன் வழுக்கி விழுவதும். பின்னர் அவன் மனம் திருந்துவதுமே இந்த நாடகத்தின் நிகழ்ச்சிகள்.

இந்த நிகழ்ச்சித் தொடரில் விசுவாசகாதக (வில்ல) னேடு சேர்ந்து ஒரு கூட்டம் செயற்படுகிறது. பிரதாபசந்திரனேடு சேர்ந்து ஒரு கூட்டம் செயற்படுகிறது. இந்த இரண்டு கூட்டங்களில், ஒன்று தீய கூட்டம் மற்றது நல்ல கூட்டம் என்பது தெளிவு ஆனல், தீயவர்கள் அனைவரும் ஒரே விதமானவர்களாகவும்.— அதே போல், நல்லவர்கள் அனைவரும் ஒரேவிதமாகவும் "மொத்தமாகச்" சித்திரிக்கப்படவில்லை; அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கென்று தனித்தனி இயல்புகள் உடைய 19-ம் நூற்ருண்டுத் தமிழர்களாகச் சித்தரிக்கப்படுகிருர்கள். பிரதாபசந்திரனின் நண்பர்கள் அனைவரும் படித்தவர்கள். ஆனலும் ஒவ்வொருவரும், வாழ்வைப் ப்ற்றிய நோக்கிலும், தம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தைப் பற்றிய ஓர்மையிலும் வெவ்வேறு நிலையினராகக் காட்சியளிக்கிருர்கள்.

30. பிரதாபசந்திர விலாசம்: அங்கம் 2; களம் 1

நாடகப் பாத்திரம் ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் பெயரே அப்பாத்திரத்தின் இயல்பை உணர்த்துவதாக உள்ளது; விசுவாசகாதகன் (நம்பிக்கைத் துரோகி) சுதேசமித்திரர் (நாட்டுப்பற்று உள்ளவர்), லவுகீகர் (தமது காரியத்தை மட்டும் கவனிப்பவர்), புராதனர் (பழமை விரும்பி), வித்தியாசாகரர் (சிறந்த ஏட்டுப் படிப்பாளி), நிபுணர் (படித்த செயல் வீரர்) என்பன போல உள்ள பெயர்களெல்லாம்,—அவைகளை மற்றொரு பாத்திரம் உச்சரித்த அளவிலேயே,—நாடகம் பார்ப்போருக்கு அப்பாத்திரங்களை முழுமையாக அறிமுகப்படுத்தி விடக் கூடியவை. இப்பாத்திரம் ஒவ்வொன்றும் தன் இயல்புக்கு ஏற்பவே பேசிச் செயல்படுவதால், பாத்திரங்களுள்ளே ஒன்றுக்கொன்று குணமோதலும் ஏற்படவில்லை.

சான்றாக, குணாலயரும் நல்லவர்; நிபுணரும் நல்லவரே. ஆனால், அப்பாவியாகிய பிரதாபசந்திரனை விசுவாசகாதகனின் சூழ்ச்சி வலையிலிருந்து (அறிவுரைகளால்) மீட்க முடியாத போது, குணாலயர் வெறும் 'மனம் நல்லர்' ஆகவும் நிபுணர் 'செயலும் சீரியர்' ஆகவும் தோற்றமளிக்கிறார்கள். "இனி வேறு வழியில்லை. விசுவாசகாதகனை உதைக்க வேண்டியதுதான்" என்கிறார் நிபுணர்; உடனே குணாலயர், "அவன்தான் போக்கிரியாயிருந்தாலும், நாமும் அவனைப் போல் நடக்கிறதா? அப்படிச் செய்வதால் நம்முடைய கவுரவுத்துக்குக் குறைவுண்டாகும்" என்கிறார். கல்வியாலும் வசதியான வாழ்க்கையாலும் (அடிமை நாட்டில்) பலருக்கு ஏற்படும் ஒருவிதமான பண்புமுலாம் பூசப்பட்ட கோழைத்தனம் இது இதைக் கேட்ட நிபுணர்: பாம்பைக் கண்டும் பாவதோஷங்கள் எண்ணுவதுண்டா?... தீயோரைக் கண்டும் தண்டிக்காமல் விலகிப் போகலாமா?" என்று மறுக்கிறார்; அதன்படியே செயலும் செய்து முடித்துவிடுகிறார்'

'துச்சனரைக் கண்டால் தூரவிலகு' என்னும் இடுப்பொடிந்த நீதிக்கு எதிரான குரல் இது; 'அறம் உரைக்கும் கதைகளிலும் அந்தத்தில் பார்த்தால் அடிதடியின் முடிவில்தான் அறம்வெல்லக் கண்டோம்!' என்னும் உண்மையை உணர்ந்து "துச்சனனை அச்சமயம் தொலைத்துத் தீர்த்தால், தொடை நடுங்கக் கோழைகளே இரார்கள் அன்றோ?" [31] என்று எழுந்த சமுதாயத் தெம்புக்குரல் இது. இந்திய மக்கள் அடிமைத்தனத்தில் மூழ்கிச் செயலிழந்து கிடந்த ஒரு காலக் கட்டத்தில் இப்படி ஓர் எழுச்சிக் குரலை ஒலித்திருக்கிறது, பிரதாபசந்திர விலாசம்.

(தொடரும்)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

திருக்குறட் கருவூலம்

நக்கீரன் வழியடிமை வித்துவான், பி. மா. சோமசுந்தர முதலியார்
இராணிப்பேட்டை.

இற்றைநாள் திருக்குறளுக்கு உரையென்று கூறிக்கொண்டு பற்பல வடிவில் பற்பல உரைகள் தோன்றியுள்ளன. இனியுந் தோன்றும். அவை திருவள்ளுவரையும் திருக்குறளையும் உரையென்ற போர்வைகொண்டு மறைப்பன. திருவள்ளுவர் அவ்வுரைகளில் காட்சி வழங்கார். உரையாசிரியரும் உரையாசிரியர் போற்றும் ஒரு மனிதருமே அங்குக் காட்சி தருவர். ஒருவர் காந்தியைக் காட்டுவார். மற்றவர் நாத்திகத்தை நாட்டுவார். இதனை நன்குணர்ந்தே, எளியவனது உள்ளமாம் பயிரை அன்பெனும் நீர்பாய்ச்சி வளமுறச் செய்த பெருந்தகை இராவ் சாகிப். கோ. வன்மீகநாதப் பிள்ளையவர்கள் (ஓய்வு பெற்ற துணைச்செயலாளர் நடுவண் அரசு), தமது திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில், கூறியதைக் காண்போம்.★ பரிமேலழகருரை யென்னும் நிழலருமை ஏனேருரைகளாகிய கோடை நடுநாள் வெய்யிலிலே நின்றறிமின் என்பதே இதன் உட்கிடை. என்னை? பரிமேலழகர் தம் உரைச் சிறப்பை சிவாநுபூதிப் பெருந்தகையாகிய உமாபதி சிவாசாரியரும்,

"வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை — ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்"

★ "The twentieth century, however saw a renaissance not so much of Tamil literature, as of interest in Tamil literature, and this has prodveed and still produces a spate of commentaries by people, none of whom can compare with Parimelazagar, in learning or intuitive pereeption of the mind of Tiruvalluvar. These commentaries. however. serve a valuable purpose. They act as a foil to the brilliance of Parimelazagar's Commentary."

என்றேத்தலையுன்னுக. அற்றாயின் பரிமேலழகர் யாண்டும் மயங்கிக் கூறியதின்றேவெனில் இன்றென்று யாமும் உரைப்பாமல்லம். ஓரிருவிடங்களில் மயங்கிக் கூறியிருக்கலாம். அஃதே மக்களியல்புமாம். என்னை?

"அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு"

என்பது தமிழ்மறையாகலானென்க. ஆயின் பரிமேலழகர் தவறுரைத்தார் என்று நாக்கடிப்பாக வாய்ப்பறை சாற்றிப் புத்துரை காணப் புக்கோர் ஒவ்வொரு குறளிலும் திருவள்ளுவரையே காணவியலாதரற்றுகின்றனரே. ஆகலின் இக்கட்டுரை பரிமேலழகரையே பெரிதுந் தழுவி நடப்பதென்றுணர்க.

(ஆ) திருக்குறளின் வைப்பு முறையைக் காண்பாம். இம்மை மறுமையெனும் இரண்டைப் பயத்தலலோடு. கைம்மாறு கருதாதாற்றும் அறம் வீட்டு நெறிக்கணுய்த்தலைக் கருதியும், ஏனைப் பொருளின்பங்களில் அறம் விராவி நடப்பினன்றி அவை சிறப்பெய்தாமாட்சி கருதியும், பொருளீட்டலும், இன்பந்துய்த்தலும் அறத்தின் பொருட்டேயாதல் கருதியும், அறத்துப்பாலை முதற்கண் வைத்தார் அறம், பொருளின்பங்களில் விரவி நிற்குந் தலைமைப் பெற்றித்தென்பதை

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல

என்பதனானுணர்க. இம்மை, மறுமை யெனு மிரண்டுக்கும் பொருள் கருவியாதல் நோக்கியும், அறம் நடத்தற்கும் இன்ப நுகர்ச்சிக்கும் அது உறுதுணையாதல் நோக்கியும், பொருட்பாலை நடுவண் மொழிந்தார். அறம் முட்டாது நிகழ்தற்கும் இன்பந் துய்த்தற்கும் பொருள் கருவியாதல்,

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணா தெய்த விருதலையு மெய்தும்"

என்பதனானுணர்க- இம்மையொன்றனையே, அஃதும் அளவோடு துய்ப்பின் பயக்குஞ் சிறுமை நோக்கியும், அறத்தின் ஒரு பகுதியாகிய இல்லறம நடத்தற்குக் கருவியாதல் நோக்கியும், பொருளின்றி நிகழ்தல் கூடாமை நோக்கியுங் காமத்துப்பாலிறுதிக்கண் வைக்கப்பட்டதென்க.

இனி, அறத்துப்பாலில் மாண்புடைப் பொருளை விளக்கும் பாயிரத்துள் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கையும் முறையே கூறுவா ராயினர் ஆசிரிய ரென்றறிக. உலகெலாமாகி வேருய் உடனு மாய் ஒளியாயோங்கி அலகிலா வுயிர்கள் கன்மத்தாணையின மர்ந்து செலலத் தலைவனுயிலங்கும் இறைவன் உயிர்கள் இவ் வுலகத்தின்பமும் வீடு பேற்றின்பமும் நெறியறிந்து அடைந் துய்தி பெறுவான் முதனூல் செய்தும், நெறியொழுக, வேண் டும் யாக்கை முதலிய கருவிகள் தந்தும் அருளிய பெற்றி நோக்கி, அந்நெறியடைந்துய்தற்கு அம் முதற் கடவுளை வழுத் தும் நெறிகற்பிப்பான் தொடங்கிக் கடவுள் வாழ்த்தை முற் கூறினர். அதனையடுத்து. அக்கடவுளதாணையான் உலகமும் அதறகுறுதியாகிய அறம் பொருளின்பங்களும் நடத்தற்கேது வாய மழையினது சிறப்புக் கூறும் வான் சிறப்புரைத்தார். அவ் வறமுதற பொருள்களை யுலகிற்கு உள்ளவாறுணர்ததுவார் முற்றத்துறந்த முனிவராகலின் அவரது பெருமை கூறுவான் தொடங்கி மூன்ருவதாக நீத்தார் பெருமை நிகழ்த்தினர். இனி, அம்முனிவரானுணர்த்தப்படும் அம்மூன்றனுள் ஏனைப்பொரு ளுமின்பமும் போலாது அறன, இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான் அவற்றின் வலியுடைத் தென்றுணர்த் துவார் அறன் வலியுறுத்தலை உரைத்தார்.

வலியாரை முன்வைத்து மெலியாரைப் பின்வைத்தல் மரபு. இது தமிழ் நெடுங் கணக்கினுள்ளும் வல்லினத்தை முன்வைத்து மெல்லினத்தைப் பின்வைத்த முறையானு மறியப்படும். இல்ல றம் மாட்சிமைப்பட்டதேனும் வரம்பு கடந்து நுகர்வான புகின் இலலா அறமாகி யிடர்ப்படுத்தும் இவ்வுண்மையையுணர்த் தற்கே, கடவுள் வாழ்த்தும் வானசிறப்பு முரைத்த வள்ளுவர் நீத்தார் பெருமையை முன்வைத்து இல்லறத்தை நடுவண் வைத்துத் துறவறததை இறுதிக்கண்வைத்தார். இஃது மிக வும் மென்மையியலபினரை வலியாரிருவர் நடுவண் வைத்தலை மானும், ஆகலின் இல்லறம் பெரிதும் மென்மைத் தன்மைத் தென்றும் பெரிதும் நுகரின் அனிச்சப் பூப்போல் குழைந்து விடுமென்றும் உணரற்பாற்று, வைராக்கிய தீபம் எனனும் நூலும்,

"நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனர் நீத்தவர் பெருமை
நூன்முகப்பாற்
சிறந்திட வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச் சிறுமை
தூற்றினரது தெரியார்க்

கறந்தவா தியற்றி னவனினுங்கோடி யதிகமா மெனமன மருது
துறந்துளோ ஊையும்பட் டணத்தெம தடிக டொகுத்தகட்
டுரைதிகழ்த் திடுமே."

என்றேருதலையு மீண்டு கருதுக இல்லறத்தை முற்கூறித்துற வறத்தைப் பிற்கூறிய தெற்றுக்கோவெனில், மக்களாய்ப் பிறந்து ளோர் பாசங்கழித்தற்கு வன்மையிலராந் தன்மை யோர்ந்து சோபான முறைகணித் துரைத்ததென்க. அன்றியும். நக்கீரனர், களவியலுரையுள் கடையாயினர்க்குரைத்த கருத்துப் பற்றியு மென்பது மொன்று.

(இ) இனி, திருக்குறளின், முதற் குறளைக் காண்போம்

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

இக்குறளுக்குப் பரிமேலழகர் கண்டவுரை வருமாறு:—

"எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன. அது போல உலகம் ஆதி பகவனுகிய முதலையுடைத்து என்றவாறு.

"இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத் திற்குத் தலைமை, விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல் பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை, செயற்கையுணர் வானன்றி யியற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி, எழுத்தெல்லாமென்றார். ஆதிபகவான் என்னும் இருபெய ரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு. உலகென்றது ஈண்டுயிர்கள் மேனின்றது காணப்பட்ட உலகத்தாற் காணப் படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலுன் ஆதிபகவன் முதற்றேயென உலகின்மேல் வைத்துக் கூறினர் கூறினரே னும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க. ஏகாரந்தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவு ளதுண்மை கூறப்பட்டது"

(தொடரும்)

குறுந்தொகை 26-ஆம் பாடல்

கு. சிவஞானம், எம். ஏ.,

களவுக் காலத்தில் தலைவன் வரைவு நீட்டித்த பொழுது தலைவி ஆற்றாமை கொள்வாள். அவ்வாற்றாமைக்குக் காரணம் என்ன என்று தோழி வினவாத பொழுதும் தலைவி தானே அவளிடத்தில் மெலிவிற்குக் காரணத்தைக் கூறுவாள். இது சங்க இலக்கிய அகத்திணைத் துறைகளுள் ஒன்று.

யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே.

— குறுந்தொகை 25.

என்ற இப்பாடல் மேற்குறிப்பிட்ட துறையைச் சார்ந்தது.

"அவன் களவில் என்னைக் கூடிய காலத்தில் அருகில் யாரும் இல்லை அவன் ஒருவனே இருந்தான். அவனே இப்பொழுது தான் கூறிய உறுதிமொழி தவறினல் யான் என்ன செய்ய முடியும்? ஓடும் நீரில் ஆரல் மீனின் வரவை எதிர், பார்த்து நின்ற குருகு ஒன்று அவ்வேளையில் அங்கு இருந்தது,' என்பது இப்பாட்டின் கருத்து.

தலைவி கூறுவதைப் போலத் தலைவன் உறுதிமொழி பொய்க்க வில்லை அவன் விரைந்து வரைந்துகொள்ளாது காலந்தாழ்த்த ஒன்றைக்கொண்டே அவன் பொய்த்ததாகவும், தலைவியைப் புறக்கணிக்கும் மொழிகளைக் கூறியதாகவும் கொண்டு தலைவி உரைப்பது மரபு அம்மரபினை ஒட்டி அமைந்தது இப்பாட்டு

எனவே, ' வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது" என்று இப்பாட்டிற்கு அடிக்குறிப்புத் தந்தனர்.

" இதனுள், யானெவன் செய்கோவெனத் தோழி வினவாக் காலத்து அவன் தவற்றை வரைவிடை வைத்தலின் ஆற்றாமைக்குத் தலைவி தானே அறிவித்தாள்," என்று நச்சினர்க்கினியரும் இதற்கு விளக்கம் கூறினர் (தொல். களவு 21.)

இனி, குறுந்தொகை 26ஆம் பாடலும் இதைப் போன்ற அமைப்பை உடையதே ஆகும்.

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினுந்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே,

என்பது அப்பாடல்.

"தலைவனைத் துறந்தான் போலவும் மறந்தான் போலவுங் கருதித் தான்றீது மொழியினுமென, தோழி வினவாக் காலத்து அவன் தவற்றைத் தலைவி வரைவிடை வைத்தலின் ஆற்றுமையை அறிவிததது," என்று இதற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் கூறினர்.

முதற் பாடலுக்குக் கூறிய விளக்கத்தையே இப்பாடலுக்கும் அவர் கூறியமையால் இரண்டும் ஒரே துறைப்பட்டவை என்பதே அவர் கருத்தாகும்.

"மலர்ந்த வேங்கை மரத்தின் கிளைகளின் மேலிருந்த மயில்கள், பூக்கொய்யும் மகளிரைப் போல் தோன்றும் இயற்கை வளமுடைய நாட்டின் தலைவன், தகுதியற்றவனைப் போலத் தீய மொழிகளைச் சொன்னுலும் மாவின் மீதிருந்து அதன் கனிகளை அருந்தும் கடுவனும் அறியும் அந்தக் கொடியோனை; அது தன் கண்ணுற் கண்டதைப் பொய்க்காது," என்று இப்பாட்டிற்குப் பொருள் கூறலாம்.

முதற் பாடலில் தலைவன் 'கள்வன்' எனப்பட்டான். இப்பாடலில் 'கொடியோன்' எனப்பட்டான்.

முதற் பாடலில் "தானது பொய்ப்பின்" என்றும் அடுத்த பாடலில் "தான்றீது மொழியினும்" என்றும் கூறப்பட்டது.

'யாருமில்லை' என முதலிற் கூறிப் பின்னர் நினைந்து 'குருகுமுண்டு' என்று முதற் பாடலில் கூறப்பட்டது அது சான்று பகருமோ, பகராதோ என்ற ஐயம் அத்தொடரில் தொக்கி நிற்கின்றது. இரண்டாவது பாடலில், "கடுவனு மறியும்", அது தன்கண் கண்டது பொய்க்குவதன்றே" என்று உறுதியாகக் கூறப்பட்டது.

இரண்டும் வேறுபட்ட உணர்ச்சி உடையவை போலத் தோன்றினும், ஆற்ருமையால் நலியும் தலைவியின் பேதைமையை வெளிப்படுத்தும் சான்றுகளாகவே உள்ளன.

இவ்வாறு இரண்டும் ஒரே இயல்புடைய பாடல்களாதலின், இரண்டாவது பாடலுக்கும் "வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது." என்றே துறை விளக்கம் கூற வேண்டும். மாருக. "நற்ருயுஞ் செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு. இஃது எற்றினுனயிற்றென்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்துத் தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிரிதோர் தெய்வமென்று கூறக்கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது," என்று துறை விளக்கம் தந்து உள்ளனர்.

களவுக் காலத்துப் பிரிவினல் தலைவி மெலிவு எய்துவதும், அதனைக் கண்ட தாயர் அம்மெலிவிற்குக் காரணம் யாது என்று குறி கூறுவாளை அழைத்துக் கேட்பதும், வேலனை அழைத்து வெறியாடுவதும். அப்பொழுது தோழி மறைமுகமாகத் தலைவியின் களவைப் புலப்படுத்தி வெறிவிலக்கி அறத்தொடு நிற்பதும் சங்க இலக்கிய மரபு.

> அகவன் மகளே! அகவன் மகளே!
> மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
> அகவன் மகளே! பாடுக பாட்டே!
> இன்னும் பாடுக பாட்டே! அவர்
> நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!

என்ற குறுந்தொகை 23 ஆம் பாட்டு இத்துறை அமைந்தது.

தலைவியின் மெலிவுகண்ட தாயர் அகவன் மகளை அழைத்து வெறியாடுகின்றனர். அவள் முருகனுல் விளைந்தது என்று கூறி, முருகனையும் அவன் குன்றத்தையும் வாழ்த்திப் பாடுகின்ருள். முருகன் குன்றமும் தலைவன் குன்றமும் ஒன்ருக இருந்து விடவே, அதைக் கேட்கும் தோழியும் தலைவியும் மன மகிழ்கின்றனர். அம்மகிழ்ச்சியுடன், அவர் நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டை இன்னும் பாடுக," எனத் தோழி வேண்டுகின்ருள்,

இதனல் அக்குன்றத்துத் தலைவனுடன் தலைவி காதல் கொண்டுள்ளமை நயம்படப் புலப்படுத்தப் பெறுகின்றது.

இத்துறை அமைந்த பாடலாக "அரும்பற மலர்ந்த" எனத் தொடங்கும் பாடலைக் கொள்ள இயலுமா?

"வேங்கை மரத்தின் மீதிருந்த மயில்கள் பூக்கொய்யும் மகளிரைப் போல் தோன்றும் நாடன், இத்தலைவிக்குத் தகுதி யற்றவன் போலக் கொண்டு கட்டுவிச்சி இந்நோய் தெய்வத் தால் வந்தது என்று தீய மொழிகளைச் சொன்னாலும், கடுவனும் உண்டு: அது அக்கொடியோனை அறியும்," என்று இதற்குப் பொருள் கூறப்படுகின்றது. இவ்விளக்கம் பொருத்தமுடைய தாகத் தோன்ற வில்லை.

குறிசொல்லுவோர் நோய் தெய்வத்தால் விளைந்தது என்று சொல்லுவதாகவே இலக்கியம் முழுவதிலும் காணப்படுகின்றது. இது உலகியலுங் கூட, அவ்வாறு சொல்லுவதைத் தலைவனின் தகுதியைக் குறைத்துக் கூறியதாகக் கொள்வது முதலில் பொருந் தாது. அவ்வாறு கொண்டதாக இப்பாட்டைத் தவிர வேறு சான்றுகளும் இல்லை.

தலைவனால் விளைந்தது இந்நோய் எனக் கூறும்போது 'கடுவனு மறியும்' என்று சான்று காட்ட வேண்டியது இல்லை. ஏனெனில், சொல்வது தலைவியை நன்கறிந்த தோழியாதலால் அதை யாரும் மறுக்கப்போவது இல்லை, குறிப்பாகப் புலப்படுத் துவதையே ஏற்றுக் கொள்வது தாயர் இயல்பு.

கட்டுவிச்சி தீது மொழிய, அவளை மறுக்க வந்த தோழி தலைவனைக் கொடியோன் என்று கடிந்துரைப்பதும் பொருத்த மாக இல்லை.

எனவே "நாடன். தகான் போலத்தான் தலைவியைப் புறக் கணிக்கும் தீய மொழிகளைச் சொன்னாலும் கடுவனும் அறியும் அக்கொடியோனை," என்று ஆற்றொழுக்காகப் பொருள் கொள் வதே பொருந்தும். (தான் — தலைவன்)

இவ்வாறு பொருள் கொள்ளவே, இப்பாடலைத் தலைவி கூற்றாகவும், "வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக் குச் சொல்லியது," என்ற துறையைச் சார்ந்ததாகவும் கொள் ளல் வேண்டும்.

ஆன்ற தமிழ்ப் புலவர்கள் மேலும் இதுபற்றி நன்கு சிந்திப் பார்களாக.

அறிவியல் ஆய்வுக் கூடத் திறப்பு விழா.

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களுள் ஒன்றுன உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளிக்காகக் கட்டப்பெற்ற அறிவியல் ஆய்வுக் கூடம் 3—9—1971 இல் தமிழ் நாடு அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் திறக்கப்பெற்றது. இந்த ஆய்வுக்கூடம் நிறுவ கூடுதல் செலவு 41,000 வெண் பொற்காசுகள் ஆயிற்று. (கட்டடம் ரூ 28,000, ஆய்வுக் கருவிகள் ரூ. 13,000). சங்கத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் அவர்களை வரவேற்றுப் பேசினார்கள். வாழ்த்துப்பா இசையுடன் படித்தளிக்கப்பெற்றது. உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் ஆய்வுக் கூடத்தைப் பற்றிய அறிக்கையைப் படித்தார்கள். சங்கத் தலைவர் தன் வரவேற்புரையில் பெரும்பாலான மாணவர் மூன்ரும் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு முடிய மூல பாட புத்தகங்களைப் படிக்காமல் குறிப்பேடுகளையே படித்துத் தங்கள் கல்வியை முடித்துக்கொள்கிருர்களென்று குறிப்பிட்டார்கள். இந்தப் போக்கு மாறி மாணவர் மூல புத்தகங்களைப் படித்துத் தாங்களே சிந்தித்துப் பொருளைப் புரிந்து கொள்ளவும். புரிந்துகொண்டதைத் தெளிவாகச் சொல்லவும் பயிலவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் ஆய்வுக் கூடம் நல்ல முயற்சியாக அமையுமென்ருர்கள்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போது, கரந்தைத் தமிழ்ச் சங்கமும் அதன் கல்வி நிலையங்களும் கரந்தைப் பகுதி மக்களுக்கு நல்லதொண்டாற்றியுள்ளன வென்பதை எடுத்துக் கூறினர்கள். இதற்கெல்லாம் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் செய்த தமிழ்த் தொண்டுதான் அடிப்படையான காரணமென்றும் விளக்கினர்கள். தமிழ் பயின்றவர்கள் இந்தக் காலத்திலும் மதிக்கப் பெறுவதற்கு தனக்கு அளித்த வாழ்த்துப்பா ஓர் எடுத்துக்காட்டாகுமென்ருர்கள். மாணவர், குறிப்பேடுகளைப் படித்துத் தேறுவதென்ற நிலைக்கு மாணவர் மட்டுமல்லாமல் ஆசிரியர்களும் காரணராவார்களென்ருர்கள். இதனல் மாணவர் சிந்தனை செய்து படிக்கும் நிலை இல்லையென்றும் இது மாறுவதற்கு சில கருத்துக்களையும் கூறினர்கள். சங்கப் பொருளாளர் நன்றி கூறிய பின்னர் சங்க வாழ்த்து நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு.

பொதுமக்கள் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்கள் மேலும் சிலவற்றிற்கு தூய தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன. வழக்கம் போல் அன்பர்கள் தக்க திருத்தங்களை எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

அதிர்ஷ்டம், துரதிர்ஷடம்	—	ஆகூழ், போகூழ்
அதிசயம்	—	வியப்பு
அபூர்வம்	—	அரிது
ஆச்சரியம்	—	இறும்பூது
அவமானம்	—	மானக்குறை
அமாவாசை	—	கார் உவா, கரி உவா, இருளுவா
உபாத்தியாயர்	—	ஆசிரியர், ஆசான்
உதாரணம்	—	எடுத்துக்காட்டு
கச்சேரி	—	அலுவலகம், மன்றம்
கக்கூசு	—	கழிவிடம், கழிவறை
சகசம்	—	இயல்பு
சகுனம்	—	உன்னம், நிமித்தம்
சந்தேகம்	—	ஐயம், ஐயப்பாடு
சமாச்சாரம்	—	செய்தி
சன்னல்	—	காலதர், சாலேகம், பலகணி
வருஷம்	—	ஆண்டு
மாதம்	—	திங்கள்
வாரம்	—	கிழமை
தேதி	—	நாள்
நிமிஷம்	—	மணித்துளி
செகண்டு	—	நொடி
யோசனை	—	ஓர்ப்பு
புத்தி	—	அறிவு, கருத்து
பஸ் ஸ்டாண்ட்	—	பேருந்து நிலையம்
பஸ் ஸ்டாப்	—	பேருந்து நிற்பிடம்
லாபம்	—	ஊதியம்
நஷ்டம்	—	இழப்பு.